# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **174/ந/2017**

ஆணை எண். **17/2018**

நாள் : **02/02/2018**

**திருமதி D. சுமதி,**
**கிழக்கு தாம்பரம்.**

– **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**அரக்கோணம் நகராட்சி,**
**அரக்கோணம்.** – **எதிர் மனுதாரர்**

சென்னை, கிழக்கு தாம்பரம், M.E.S. சாலை, மாடல் வில்லேஜ், கதவு எண்.6 முகவரியில் வசிக்கும் திருமதி D. சுமதி அவர்களின் 18.08.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 24.08.2018 அன்று பெறப்பட்டு, 174/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, கிழக்கு தாம்பரம், M.E.S. சாலை, மாடல் வில்லேஜ், கதவு எண்.6 முகவரியில் வசிக்கும் திருமதி D. சுமதி என்பவர், அரக்கோணம் நகராட்சியில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றிய தனது கணவர் திரு விஜயன், 31.05.2007 அன்று காலமாகி விட்டதாகவும் அவருக்குச் சேரவேண்டிய இறப்புக்குப் பின்னான ஓய்வூதிய பலன்கள் மற்றும் தனக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக கீழ்க்காணும் ஆவணங்களை சமர்ப்பிக்கக் கோரி, 09.11.2017 நாளிட்ட அரக்கோணம் நகராட்சி ஆணையரின் கடிதத்தில் மனுதாரர் கோரப்பட்டுள்ளார் :-

1. காலம் சென்ற திரு விஜயன் அவர்களின் அசல் இறப்புச் சான்றிதழ் ;
2. அசல் வாரிசு சான்றிதழ் ;
3. திரு விஜயன் துப்புரவுப் பணியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட பணி நியமன ஆணை.

முறையீட்டு மனுதாரர் மேற்குறிப்பிட்ட சான்றிதழ்களை அரக்கோணம் நகராட்சி ஆணையருக்கு உடன் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேற்படி சான்றிதழ்கள் வரப்பெற்றவுடன் காலம் தாழ்த்தாமல் உடன் நடவடிக்கை மேற்கொள்ளவும் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, **சனவரி** திங்கள், **31–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **நகராட்சி ஆணையர்,**
   **மேட்டூர் நகராட்சி,**
   **சேலம் மாவட்டம்.**

2. **திருமதி D. சுமதி,**
   **6, மாடல் வில்லேஜ்,**
   **எம்.இ.எஸ். சாலை,**
   **கிழக்கு தாம்பரம்,**
   **சென்னை – 600 059.**

நகல் : **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**